ன்னிறந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பெருமைபொருந்திய பஞ்சபா
ண்டவர்பெறுவார்களென்று சொல்வதுபொய்யோ தருமபுத்திர மகாராஜ
ருடைய ஒப்பற்ற சௌரியஞ்சொல்லோதோ நீ சொல்வாய் வெற்றியையு
டைய வாசனேயென்று பின்னுஞ்சொல்லுவானென்றவாறு. (௨௬)

கேவலந்தீர்வரியபகைகிடைக்குமெனிற்கொள்மறைக்குக் கிரியொன்றேந்துங்
கோவலன்போயுரைத்தாலுங்குருநாடுமாசுமவன்கொடுக்கமாட்டான் ... *
நாவலம்பூதலத்தரசர்நாடிழந்தாரெனநம்மைநகையாவண்ணங் ...... *
காவலன்றன்படைவலியுமெனதடம்புயவலியுங்காண்பாயே... ...... *

(எ-து) கேவலமாகத் தீர்வதற்கு அரியபகையிருக்க மேகந்தொரிவின்ற அதிகமறைக்குப் பசுத்திரனைக்காக்கும்பொருட்டு கோவர்த்தனபர்வதத்தைக்கேந்திய கிருஷ்ணனேதுவர் தூதுபோய்ச்சொன்னாலுங் குருநாட்டையும் அரசையும் துரியோதனன் கொடுக்கமாட்டான் ஆகையால் சம்புத்தீவாகிய இந்தபூமியிலேயிருக்கின்ற அரசர்கள் நாட்டையிழந்தாரென்று நம்மைநகையாதபடி துரியோதனனுடைய சேனைவலியையும் என்னுடைய விசாலமாகிய புஜவலியையும்பார்க்கலாமென்று பின்னுஞ்சொல்லுவான் நகுலனென்றவாறு. (௨௭)

அன்னநடையரம்பையதனையவுணர்கவர்ந்திடவிமையோராக்காக ...... *
முன்னமவருடன்பொருதுசிறைமீட்டானெங்குலத்துமுதல்வனன்றோ ... *
மன்னவையில்யாங்காணமடவாலைத்துகிலுரிந்தவலியோன்றன்பால் ... *
இன்னமிறந்தவன்றுடைக்கீழிருந்தக்காணம்மையுலகென்சொலாதோ ... *

(எ-து) அன்னம்போல் நடையையுடைய தேவரம்பையை அசுரர்கள் பிடித்துக்கொண்டுபோக அப்போது அவன்பயந்து கூப்பிடுதலுந்தெரிந்து இந்திரன்பொருட்டு முற்காலத்திலே அந்த அசுரருடனேயுத்தஞ்செய்து சிறைமீட்டவன் நம்முடைய குலத்துத்தலைவனாகிய புரூரச்சக்கிரவர்த்தியல்லவோ இராஜசபையிலே நாங்காணும்படிக்குத் திரௌபதியை அவமானபங்கஞ்செய்த வலிமையையுடைய துரியோதனை விட்டிருந்தால் இன்னம் யாசித்து அவன்றுடைகீழிலிருந்தால் நம்மை உலகம் என்னசொல்லாதென்று பின்னுஞ்சொல்லுவான் நகுலன்-எ-று. (௨௮)

கானெறிபோய்க்கரந்துறைந்துகடவாநாட் கழித்ததற்பின்காணீங்கி ..... *
சனமிலாவகைவந்தார்நந்துணைவரெனச்சிறுதமிரகாருகில் ....... *
டானகரும்வளநாடுமினையுந்தன் மொழிப்படியேயுதவாதாகில் ...... *
தானறியாதவன்பிறர்போய்க்கற்பித்தாலடைவேறுதாவைவேந்த ....... *

(எ-து) வனவாசம் பன்னிரண்டுவருஷமும், அஞ்ஞாதவாச மொருவருஷமும் இருந்து கழித்தபிற்பாடு காட்டைவிட்டு சனமில்லாதபடி வந்தார்கள் நம்முடைய அண்ணன் தம்பிமார்களென்று கொஞ்சமும் மிரக்கஞ்செய்யாவிடில் தாயாதிபட்சமுள்ளான மகத்தாகிய நகரமும்வளநாட்டையு நாமும் மற்றையுங்குந் தன்சொல்லின்படியே கொடாமற்போனானாகில் தா

டவன்றெனப்போல் தன்னுடைய கண்களிரண்டுங் களிப்படையவுடைந்து இ தயறுக்கொண்ட பூமாலையணிந்த விதாரணனவன் இந்தப் பிறப்பையும் நீக்குவான் மோக்ஷவீட்டையடைந்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ வேண்டாம்-எ-று. (௧௮)

உள்ளிறு துயரத் துன்புறு முருகிலுறைறுக்கு........*
துள்ளிறன் விழுந்திடையாடி ருழிருன் றுயரைத்... ......*
தள்ளிறன் மனத் தடக்கையாற்றுத் தானுமுரைக ... ...*
யள்ளிறுமெனைக் கண்களா லருந்துறவளிப்பான் ... ...*

(எ-று) நினைத்தான் நினைந்து மனமுருகிறான் எழுந்திருந்து துள்ளி றன் கீழேவிழுந்து இரண்டுபாதங்களையும் சாமிலே குழறுன் தான்படத் தைநீக்கிறன் தாமரைமலர்போன்ற விசாலமாகிய கைகளால் தந்தவாசி ர்தத்தைத் அள்ளினவனென்னும்படி கண்களால் பகவானமுதைப் பருகனாள் விதாரன்-எ-று. (௧௯)

முன்னமே தாயின்முருளிய முதாபமோதநியே... ......*
பன்னகாநிபப்பாபமோ பச்சைசபாவிலேயோ..........*
சொன்னகால்வகைக் கருநிமோகருதிநீரெய்த... ......*
வென்னமாதவைற் செய்தருச்சிறுகுடிவென்றுன் ... ...*

(எ-று) முன்னமே நிந்திரைசெய்தருளிய பழைய பாம்பணையோ, சே ஷசயனமோ, பரியமைடபத்திரமோ, சொல்லிய நாலுவேதங்களோ, நினை த்து நீர்மருவுதற்கு முன் என்னதவத்தைச் செய்தது இந்தச் சிறியகுடிசை யென்றுன் விதாரனென்றவாறு. (௨௰)

மூப்பையாகிய புவனங்களனைத்துமுன் முதல்வ ... ...*
னொப்பையாருளை காயகன் விருந்திறைக்கசைந்தா ...*
னப்பமுமென்றனை மூதுதுருயிரமடையார்........ ......*
தப்பையமேகாக்கினை னவர்களுமவிளாவுடன்சமைத்தார்...*

(எ-று) இப்பிரகாரகிய புவனங்களையெல்லா முண்டருளிய முதல்வ னாய் எம்மை ஆளாகவுடைய கிருஷ்ணபகவானுனவர் விருந்துக்குச் சம் மதித்தாரென்று ஆச்சரியப்பட்டனன் அப்போது அதுவாருவியாந்த சமையற்காரரைப் பார்த்தான் அவர்களும் சீக்கிரத்திலே சமைத்தார்களெ ன்றவாறு. (௨௧)

வந்தவெற்றிவேல் வாரிசிலையவர்க்குமவாளவர்க்கும் ...*
கந்தடர்ப்பனை கரிக்குமவெங்கவளவாம்பரிக்கும் ... ...*
ஐந்துபத்துநா ருயிரமாசர்க்குமெவர்க்கும்... ... ......*
இந்திரற்குமெய் காவுறவெதுவும்படியியற்றி...... ......*

(எ-று) கிருஷ்ணசுவாமியுடனே வந்த வெற்றியையுடைய வேல்வளை ந்த வில் வாள் முதலிய ஆயுதத்தையுடையவர்களுக்கும் கட்டுத்தறியைப்

ஒருவர்வாழ்மனையிலுண்டுபின்னுமவருடனெழுன்றுபொரவுன்னிலும்......*
திரவியுள்ளவுமதியமுள்ளவுமிவர்களைநரகில்வைப்பரார்......*

[எ-து] சர்ப்பக்கொடியையுடைய துரியோதனனை புத்திரனையுடைய மந்திரிகளாயிருந்து இராசாங்கத்தைப்புரித்தாலும் ஆசிரியர் சொல்லைத் தடுத்தாலும் ஒருவர்செய்த உபகாரத்தை மறந்தாலும் ஒருத்தர் வீட்டிற் சாப்பிட்டு பின்பு அவருடன்பகைத்து யுத்தஞ்செய்தாலும் சூரியசந்திரர் களுள்ளவரைக்கும் இவர்கள்நரகத்திலேயடைவார்கள்-எ-று. (௱௯௩)

சீதநாண்மலர்மடந்தைகேள்வனிவைசெப்பவுந்தெரியதொப்பிலா......*
நாதநாயகன்முகத்திலவைத்தவிருநயனமுஞ்சிவிகநகைசெயாத்......*
தூதனுமிவருதன்மைசொல்லுகென்மன்னர்மன்னனிதுசொன்னபின்...*
வேதநாறுமலருந்திவண்டுபடிமாலைசெய்தவனுமுரைசெய்தான்......*

[எ-து] குளிர்ச்சிபொருந்திய அன்றலர்ந்த தாமரைமலரி லிருக்கும் இலட்சுமிகாந்தராகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் இந்தவார்த்தைகளைத் தெரியச் சொன்னமாத்திரத்தில் ஒப்பில்லாத நாயகராகிய நாதனுடைய திருமுகத் திலவைத்த இரண்டு கைகளையுடையவனுகி மிகவும்நகைசெய்து தூதனு ய்வந்தகாரியத்தைச் சொல்லுமென்று துரியோதனன்சொன்னபின்பு வே தங்கள்மணக்கின்ற தாமரைமலராகிய நாபியையும் வாசனைவீசுகின்ற துள பமாலையையுமுடைய கிருஷ்ணஸ்வாமியும் அருளிச்செய்தார்-எ-று. (௱௯௪)

அந்நெறிகாசிறந்தவின்றுணைவர்சொன்னசொல்லும்வழுவாதுபோ......*
யடுதலரசினைநொந்துதன்னிழலிழந்தகானிலிடையெய்தியும்......*
நீதிலாவகைகுறித்தநாள்பலகழித்துவந்தனர்செகத்தினிற்......*
கோதிலாதகுருகுலமிகுமவுரிமைமண்பொடுகொடுத்தியே......*

[எ-து] உன் துணைவராகிய பஞ்சபாண்டவர்கள் சூதாடுகையினலே ராச்சியபாரத்தைத்திழந்து சொன்னவார்த்தையையுந் தப்பாமற்போய் அவ ரொன்றுசொல்லும்படி நொந்து குளிர்ந்தநிழலில்லாத காட்டினிடத்தே போயுங் குற்றமில்லாதபடி குறித்தநாள் அனேகமுங்கழித்துவந்தார்கள்- பூமியிலே குற்றமற்ற குருகுலத்திலேபிறந்த ராசாவே அவர்களுடைய ரியபூமியினைச் சினேகத்தோடு கொடுப்பாயென்று பின்னுஞ்சொல்லுவா ர் கிருஷ்ணதேவர்-எ-று. (௱௯௫)

சொல்லவாவுரகதுவசநின்னுரியதுணைவர்தங்களையழைத்துநீ......*
வல்லவாறுசிலநாடளித்தவர்கடம்முடன்கெழுமிவாழ்திலேல்......*
நல்லவாய்மையிலையுடையையென்றரசநாடொறும்புகழ்வர்நண்புகொண் *
டல்லவாமெனமறுத்தியேலழுமமான்மையும்புகழுமல்லவே......*

[எ-து] சொல்லைவிரும்புகின்ற சர்ப்பக்கொடியுடைத்த துரியோத னராசாவே உனக்கு உரிமையுள்ள உடன்பிறந்தவர்களை அழைத்துக் கூடி யபடியில் நீசில நாடுகொடுத்து அவர்களுடன்கூடி வாழ்வையே யானுல் ந ல்லசத்தியத்தையுடைய நிலைமையையுமுடையாயென்று ராசாக்கள் சினேகித்

காடளிக்கவுகனிடை தெரிந்தெழில்காந்துபோயினர்கள் காணவோர் ... ❋
வீடளிக்கிலுமவெறுப்பரோவிதனை வீடுகவென்றெதிர்விளம்பினான் ......❋

[எ-து] பக்கங்களிலே வண்டின் கூட்டங்கள் நெருங்கப்பெற்ற பசிய துளபமாலையையணிந்த கிருஷ்ணதேவரே மகாரத்னங்களையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த நாட்டைக்கொடுக்கவும் ஐந்துபேருடைய நகரைக் கொடுக்கவும் வேண்டுமோ நாட்டைக்கொடுக்க அதிலேயிருந்து அகப்பட்டுப்போன பஞ்சபாண்டவர்கள் இப்போது காடுபெறும்படி ஒருவீடு கொடுத்தாலும் வெறுப்பார்களோ இதனைவிடக்கடவீரென்று எதிரேசொன்னான் துரியோதனன்-எ-று. (௫௰௪)

தங்கைதாதனுருதன்மைகண்டினைய தாய்பயந்தவிருதம்பியர்க் .........❋
கிந்தவாழ்வுமரசுங்கொடுத்தவுனின் குலத்தொருவனிங்குளான் ......❋
மூத்தமானிலமனைத்திலுக்குமுயர் முறைமையாலுரியவரசருக் ... ......❋
கைந்துமாநகருநீகொடாமொழியி லென்னதாகுமனதாரியல் ... ... ......❋

[எ-து] தன்னுடைய தகப்பனாரசைவைத்த தன்மையாய்ப் பார்த்துஞ் சிறியதாய்பெற்ற இரண்டுதம்பிகளுக்கு இந்தவாழ்வையும் அரசாட்சியுங் கொடுத்து பீஷ்மாசாரியரும் உன்குலத்திலேயொருவர் இங்கேயிருக்கின்றார் பழைமையாயுள்ள மகத்தாகிய பூமிக்கெல்லாம் உயர்ந்தமுறைமையாலே உரிமைபெற்ற பாண்டவர்க்கு ஐந்துநகரமாகிலும் நீகொடாமொழியிற் தாயாதில் உனதரசாட்சி என்னபயோசனத்தையுடையதாகுமென்றார் கிருஷ்ணதேவர்-எ-று. (௫௰௫)

ஒருகுலத்தினிலிரண்டுமன்னவருடன்பிறந்துரிமையெய்திடு ... ......❋
மிருதிறத்தவருமொக்கவாழ்வுறுத லெங்குலத்திலுமியற்கையே........❋
பொருகுலக்களிறுவளர்திசைக்கண்மிகு புகழ்படைப்பிலெபெறுங் ❋
குருகுலத்தவரியற்கைநன்றெனமொழிந்தனன்கரியகோவலன்... ......❋

[எ-து] ஒருகுலத்திலிரண்டு ராசாக்களுடன்பிறந்தவுரிமையையடைந்தால் இரண்டுதிறத்தோரும் ஒக்கவாழ்வையடைவது எங்குலத்திலும் சுபாவமாகும் பொருகின்ற அஷ்டதிக்கெசங்கள் வளரப்பட்ட திக்குகளிடத்தில் மிகுந்தகீர்த்தியைப்பரப்பி எழுபோகத்தையும் பெற்றகுருகுலத்தாருடைய இயல்புநன்றாயிருக்கின்றதென்றுசொன்னார் நீலமெய்வணரானகிருஷ்ணதேவர்-எ-று. (௫௰௬)

போராவினைதுரந்தமாயனிவை பேசவன்பினொடிசைக்கவுஞ்.............❋
சீராவினையுயர்த்தகோவும் விழிதீயெழும்படிசெயிர்த்துமே... .........❋
போராகிருபன்மணிநெடுஞ்சுடிகை யாயிரங்கொடுபொறுத்தபார் ... ...❋
வீரரானவர்தமல்லவோ வுரிமைவேண்டுமோவெனவிளம்பினான்... ... ...❋

(எ-து) பெரிய சர்ப்பசயனத்தைவிட்டுத் துறந்த கிருஷ்ணதேவர் இவைகளைச்சொல்ல வன்மையுடனே பின்னையுஞ் சிறந்த சர்ப்பக்கொடியை யுயர்த்த துரியோதனனும் கண்கள் நெருப்பென்று சொல்லும்படி உன்

துளிவரும்புனல்பரிக்குந்தியிடு சோறுதின்றுயிர்சுமந்துகொண் ... ...※
டொளிவரும்படியிருந்தபாவியரு மின்றுமானமிலையுளர்வரோ ... ... ...※

(எ-து) ஐந்துபேருக்கு முரியவளாகிய துரோபதைக்கை இரக்ஷையாயி லே வஸ்திரங்கள் மொய்க்கின்ற கூந்தலைப்பிடித்து நான் எளிதாகத் துகிலுரிக் கும்போது அருகேயிருந்து பார்க்கிறவர்களல்லவோ துளியாகவருகின்ற நீரை விரும்பியுண்டு சோற்றைத்தின்று உயிரைச்சுமந்துகொண்டு பிரகாசமுண் டாகும்படியிருந்த பாவிகளாகிய பாண்டவர்களும் இன்று அபிமானமில் லையுடையவர்களோவென்றான் துரியோதனன்-எ-று. (௱௨௩)

அன்னையானவருமிருவர்மூத் தெனித்தகைத்தபர்களின்பராம் ... ... ......※
பின்னையானசொடு குருகுலத்துரிமை பெறுவதொருபிறப்பிலர் ... ...※
பின்னைபார்முடியிலவரும்பரிவுடன் தனித்தனிவிரும்புவார் ... ......※
மென்னையாமவரொடொருகுலத்தரசென்பதென்மையிதுவென்கொலோ.

(எ-து) மாதர்களிருவராக முன்பெற்ற பிதாக்களினுதேசம் பின்பு ஆசைகொண்டு குருகுலத்தரென்று முறைமையைப் பெறுவார்களாம் ஒருபிறப்பிலுமில்லாதவளாகிய ஒருத்தியை ஆ-ஆ கிரீடமில்லாத ஐந்து பேரும் அன்புடனே தனித்தனியிச்சிப்பார்கள் யாம் அவரோடு ஒருகுல த்தராசாக்களென்பது என்ன ஆண்மை இது என்னவென்றான் துரியோ தனன்-எ-று. (௱௨௪)

ஞாலமுழுதுமுடையமன்றனைத்திட நகைத்துவன்துவரநாத்தும் ... ......※
மாலமுழுதுமிவனிவனைப்பெரி தறிந்துபோரவையகன்றுபோய் ... ...※
கோலமுற்றசிலைவிதுரன்வாழ்வுபெறு கோயில்சென்றுநனிருவிகிறான். .※
சீலமற்றவர்சினந்தபோதுமொருதீதிலாதவர்செயிர்ப்பரோ. ..............※

[எ-து] உலகமுழுதையுமுடைய துரியோதனன் இதுசொல்லத்துவா ரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரும் நகைசெய்து இவனினைப்பெ ல்லாம் விஷமென்று நினைத்துப் பெரியச்சபையை நீங்கிப்போய் அழகிய வில்லையுடைய விதுரன்வாழ்கின்ற அரண்மனைக்குப்போனார் நற்குணமி ல்லாதவர்கள் கோபித்தபோதிலும் ஒருகுற்றமில்லாதவர்கள் கோபிப்பா ரோ-எ-று. (௱௨௫)

கரிந்தமாலைசருகாகவும்புதிய கமலவாண்முகம்வியர்க்கவும். ..............※
இருந்துகண்ணிணைசிவக்கவுங்கொடிய செய்யவாயிதழ்துடிக்கவு. ........※
மிருந்தபேரவையினெடுதுயிர்த்திடு மிராசராசனவனுக்கிவன். ...........※
விருந்துசெய்தவுறவென்கொலென்றுமா றெதிர்விதுரனைவிளம்புவான் ...※

[எ-து] அப்போது பூமாலைகள் கருகிச்சருகாகவும் புதியதாமரை மலர் போன்ற முகம்வியர்க்கவும் இருக்கமாகிய கண்களிரண்டுஞ்சிவக்கவுங்கொ டியசிவந்தவாயிதழ்கள் துடிக்கவும் தானிருந்தசபையிலே மிகவும் பெரு மூச்சுவிடுகின்ற இராசராசனாகிய துரியோதனனானவன் அந்தக்கோபால கிருஷ்ணனுக்கு இவன்விருந்துசெய்த உறவு யென்னவென்று அரசர்க்கெ திரே விதுரனைப்பேசுவான்-எ-று. (௱௨௬)

